REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 17உ செவ்வாய் (1—3—55) ★ ★ வெளியூர்: மாசி 18உ புதன் (2—3—55) [இதழ் 221

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை அவர்கள்

காஞ்சி, மார்ச். 1—

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இங்கு வந்து சேர்ந்தார்கள்.

கடுமையான சுற்றுப் பயணத்தால், கடந்த மூன்று நாட்களாக இருமலும், காய்ச்சலும் ஏற்பட்டு உடல் நலிவுற்றிருப்பதால், டாக்டரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டு ஓய்விலிருக்கிறார்கள்; எனவே, இன்னும் இரண்டு வாரங்கட்கு வெளியூர் நிகழ்ச்சி எதிலும் கலந்துகொள்ள முடியாமலிருக்கிறார்கள்.

மலேயாவில் குன்றக்குடிகளார் நாவீச்சு!

கழகத் தலைவர்களைத் தாக்கிப் பேசினதின் எதிரொலி

கேள்விகளுக்கு பதில் கூறாது பேச்சுக் கடையை மூடினார்!

குன்றக்குடி அடிகளார், தன்னுடைய மலாயா சுற்றுப் பிரயாணத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளில், தமிழகத்தில் வாழும் திராவிட இயக்கத் தலைவர்களையும், சீர்திருத்தக் கொள்கைகளையும் கண்டபடி தாக்கிப் பேசிவந்ததின் காரணமாய் சிங்கப்பூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மலாயாவின் பல பகுதிகளிலும் அவர் பேசிய ஒன்றுக்கொன்று முரண்பட்ட பேச்சுக்களை கேள்விகளாக அச்சிட்டு, குன்றக்குடியாருக்கு 21—2—55-ல், சிங்கப்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் கொடுக்கப்பட்டது; அச்சிட்ட தாள்கள் பொது மக்களுக்கும் வழங்கப்பட்டது; அத்துடன், 'கழகத்தின் சார்பில், மேடையில் குன்றக்குடியாருடன் வாதிடவும் தயாராக உள்ளோம்,' என்று சவால் விடப்பட்டது; ஆனால் குன்றக்குடியார், 'கேள்விகள் கேட்க விரும்புவோர் இரவு 9 மணிக்கு மேல் தேங்ரோடில் உள்ள சுப்பையா கோவிலில் வந்து என்னை சந்திக்கவும்,' என்றும், 'கேள்வித் தாள்களை அச்சடித்து எல்லோருக்கும் வழங்கியது மிகவும் வருந்தத்தக்கது,' என்றும் குறிப்பிட்டுவிட்டு, அவசர அவசரமாகக் கூட்டத்தை முடித்துக்கொண்டு போகப் புறப்பட்டார்.

கேள்விகளுக்கு குன்றக்குடியார் பதில்கூறாது கூட்டத்தை முடித்துக்கொண்டதை கண்ட பொது மக்கள், 'குன்றக்குடியாரே! கேள்விகளுக்கு பதில் கூறுங்கள்,' என்று கூச்சலிட்டனர்; கூட்டத்தில் குழப்பம் ஏற்படவே, தி. மு. கழகத் தோழர்கள் அமைதியை நிலைநாட்டினர்.

கேள்வித் தாள்களைப் படித்துவிட்டு, பொதுமக்கள், சைவ சமயத்தின் பாதுகாவலர்களாய் போற்றப்படும் நாயன்மார்களின் கீழ்த்தரமான செயல்களையும், ஆபாசமான புராணக் கதைகளைப் பற்றியும், அந்த ஆபாசக் களஞ்சியங்களுக்கு ஆதரவு தேடவந்த குன்றக்குடியாரைப் பற்றியும் பழித்துப் பேசிக்கொண்டு சென்றனர்.

கடந்த 21—2—55 மாலை 6 மணிக்கு சிங்கப்பூர் ஹேப்பி வொர்ல்ட் ஸ்டேடியத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குன்றக்குடி அடிகளார், 'இலக்கியம்' என்ற தலைப்பின்கீழ் பேசும்போது, தமிழனின் சிறந்த இலக்கியமான கம்ப இராமாயணத்தை எரிக்க வேண்டுமென்று தமிழகத்தில் ஒரு கூட்டம் பேசியும், எழுதியும் வருவது வருந்தத் தக்கதென்றும், 'அறிவு செத்தால்தான், அறம் வளரும் - அன்பு வளரும்' என்று குறிப்பிட்டு, 'பெண்களுக்கு மறுமணம் செய்ய வேண்டுமென்று கூச்சலிடுவது தமிழர் சமுதாயத்தின் ஒழுக்கத்திற்கும், அறநெறிக்கும் புறம்பானது — வெட்கக்கேடானது' என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், 'தமிழகத்தில் சீர்திருத்தம் என்ற பெயரில், நினைத்தபடி எல்லாம் பணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு, மக்கள் படிக்கக்கூடாத — கீழ்த்தரமான எண்ணங்களைக்கொண்ட புத்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள்; தமிழர்கள் இதுபோன்ற தாழ்ந்த கருத்துக்கொண்ட புத்தகங்களை படிக்கக்கூடாது,' என்றும் குறிப்பிட்டார்.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

1955-56ம் ஆண்டைய சென்னை சர்க்கார் வரவு-செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலதன மிடும் நீர்ப்பாசனத் திட்ட விவரங்கள் இங்கு தரப்பட்டுள்ளது:

ஆரணியாறு	: 49,54,200
மேட்டூர் கால்வாய்கள்	: 29,86,800
மாலம்புழா	: 24,21,900
மணிமுத்தாறு	: 1,25,34,500
வலையாறு	: 39,46,400
மங்கலம்	: 35,24,700
கீழ் பவானி	: 6,64,500
அமராவதி	: 98,40,700
வைகை	: 68,39,400
சாத்தனூர்	: 1,01,49,800
கிருஷ்ணகிரி	: 40,00,000

ஜப்பான் பொதுத் தேர்தல்

ஜப்பானிய மக்கள் சபைக்கு (கீழ் சபை) நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் இப்போது பிரதமராயிருக்கும் பிரதமர் ஹடோயாமாவின் புதிய ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றுள்ளது; ஆனாலும், அவரது கட்சிக்குப் பூரணமான பெரும்பான்மை இடங்கள் கிடைக்கவில்லை

ஜப்பான் மக்கள் சபைக்கு மொத்தம் 467 இடங்கள் உண்டு.

புதிய ஜனநாயகக் கட்சி (பிரதமர் கட்சி) 186; லிபரல் கட்சி 111; இடதுசாரி சோஷலிஸ்டு 89; வலதுசாரி சோஷலிஸ்டு 67; தொழிலாளர், குடியானவர் கட்சி 4; கம்யூனிஸ்டு 2; சில்லறைக் கட்சிகள், சுயேச்சை 8—இப்படி அந்த 467 இடங்களும் பிரிந்துள்ளன.

27—3—55-ல் தி. மு. கழக சிற்றூர்-பேரூர்-நகரக் கிளை செயற்குழுத் தேர்தல்

10—4—55-ல் மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தல்

24—4—55-ல் புதிய பொதுக்குழுக் கூட்டம்: பொதுச்செயலாளர் தேர்தல்

பொதுச்செயலாளர் அறிவிப்பு

★

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் இவ்வாண்டு நடைபெற வேண்டிய தி. மு. கழகத் தேர்தல்கள் பற்றிக் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்; அது வருமாறு:—

தி. மு. கழக சிற்றூர் (சிறிய பஞ்சாயத்து-Minor Panchayat)க் கிளை, பேரூர் (பெரிய பஞ்சாயத்து-Major Panchayat)க் கிளை, நகர (நகராட்சி-Municipality)க் கிளை, சென்னை வட்ட (Division)க் கிளை ஆகியவற்றின் புதிய செயற்குழுத் தேர்தல்கள் நடைபெற, **27—3—55** ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லா மாவட்டங்களின் செயற்குழுத் தேர்தல் நாளாக, **10—4—55** ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய பொதுக்குழு கூடிப் பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நாளாக, **24—4—55** ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

1—3—55-ஆம் நாளிலிருந்து **31—4—55**-ஆம் நாள் வரையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. **28—2—55**-ம் நாள்வரை உறுப்பினரானவர்கள் மட்டுமே கிளைக் கழகத் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும். **28—2—55**-ஆம் நாளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்த வேண்டும். புதிய கிளைக் கழகங்கள் அமைப்பது **1—5—55**-க்கு மேல்தான் நடைபெற வேண்டும்.

கிளைக் கழகங்கள் அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் **27—3—55**-ஆம் நாளில் மீண்டும் கூடி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவுகளைக் கிளைக் கழகப் பதிவுச் சீட்டில் எழுதி, **31—3—55**-க்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் கழகப் பதிவுச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து **10—3—55**-ஆம் நாள் அனுப்பி வைக்கப்படும். பதிவுச் சீட்டு கிடைக்கப்பெறாத கிளைக் கழகங்கள் உடனே தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

27—3—55-ல் தேர்தல் நடத்திப் பதிவுச் சீட்டைத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும் கிளைகள் மட்டுமே மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பெறும்.

கிளைகளின் தேர்தல் விதிகளும், முறைகளும் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

'அறிவகம்',
சென்னை.
1—3—55

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காங்கிரஸ் மந்திரி சபையில் பிளவு

இல்லையென மறுப்பு

ரேவா, பிப். 28—

விந்திய பிரதேச மாநிலத்தில் ஆட்சிப் பீடத்திலிருக்கும் காங்கிரஸ் மந்திரி சபையில் பிளவிருப்பதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை, 'இல்லை' என்று மறுத்திருக்கிறார்—அந்த மாநில நிதி மந்திரி.

சபையில் கவர்னரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறியது. இரு திருத்தங்கள் தோற்றன.

தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் நிதி மந்திரி சந்திரகுமார் மனுவ் என்பவர் மந்திரி சபையில் பிளவு என்ற பேச்சை மறுத்தார்.

பிச்சை எடுக்காதீர்!

ஓட்டல்களை ஆதரிக்காதீர்!

கோத்ரா, பிப். 28—

இங்குள்ள பின் தள்ளப்பட்ட வகுப்பினரில் ஒரு பிரிவினராகிய வக்ரி சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கூட்டமொன்றில், ஓட்டல்களை ஆதரிக்கக்கூடாது என்று தீர்மானித்துள்ளனராம்.

மேலும் அவர்கள் தங்கள் சமூகத்தின் சமூக, பொருளாதார பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மாநாடு ஒன்று கூட்டுவதற்காக குழு ஒன்றும் நியமித்துள்ளனராம்.

பஞ்சத்தால் வாடும் வக்ரி சமூகத்தினர் இனி தெருக்களில் சென்று என்ன கஷ்டம் வந்தாலும், உணவுக்காக பிச்சை எடுக்கக் கூடாது என்றும் முடிவு செய்துள்ளனராம்.

அரை மணி நேரத்தில் அகிலம் முழுவதும்!

லண்டன், பிப். 27—

"தற்கால ஆயுதங்களை உபயோகித்து யுத்தம் நடந்தால் அரை மணி நேரத்தில் எல்லாத் தரப்பினரும் அழிந்துவிடுவர்," என்று பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானியான பேராசிரியர் பவல் கருத்தறிவித்திருக்கிறார்.

"10 அல்லது 20 நீர்வளிக் குண்டுகளை வீசினால் பிரிட்டனில் மனித வாழ்க்கையே அற்றுப் போய்விடும்," என்று அவர் கூறுகிறார்.

அமெரிக்காவிடம் சுமார் 4,000, ரஷ்யாவிடம் சுமார் 1,000 அணு குண்டுகள் இருப்பதாக, அவர் மதிப்பிடுகிறார்.

20 லட்சம் டன் வீரிய வெடி குண்டுக்கு ஈடான நீர்வளிக் குண்டு ஏற்கனவே வெடித்துப் பார்க்கப்பட்டுள்ளதென்றும், அது விளைவிக்கும் நஷ்டத்திற்கு அளவேயில்லை என்றும் அவர் கூறுகிறார்!

குஜராத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'கக்ரபாரா' அணைத் திட்டத்தின் மூலம் 6½ லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 1—3—1955 செவ்வாய்

எஜமான் திறவுகோல்?

சென்னை அரசாங்கத்தின் அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் வெளியாகிவிட்டது. சென்ற ஆண்டைப் போன்றே, இவ்வாண்டு திட்டமும் வரவுக்கு மீறிய செலவைக் கொண்டுள்ளதாகவே இருக்கிறது.

அரசாங்கத்தின் செலவு அதிகரிப்புக்கும், பெரும்பாலான மக்களின் குறைகள் களையப்பட்டு தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கும் கண்டிப்பாகத் தொடர்பு இருந்தாக வேண்டும். ஆனால் அப் பொதுப் பொருத்தம் இவ் வரவு-செலவுத் திட்டத்தில் பொருந்தி இருப்பதாகச் சொல்வதற்கில்லை.

மக்களுக்குள்ள இன்றியமையாக் குறைகளோ ஏராளம்; தேவைகளோ அனந்தம்; ஆனால், அரசாங்கத்தின் செல்வ நிலையோ படுமோசம்!

பெரும்பான்மையான மக்களின் மிருக வாழ்வைப் போக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், வேலைபற்றவருக்கு வேலை தேடித் தருவதும், மிக மிகக் குறைந்த உழைப்புக்கே வாய்ப்புப் பெற்றிருப்போருக்கு மேலும் பணி புரிய வாய்ப்பைத் தேடித் தருவதும், பெயருக்குப் பொருத்தமாக உள்ள ஒரு அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும். தன்னையும் அத்தகைய ஒரு அரசாங்கந்தான் எனக் கூறிக்கொள்ளும் அருகதை இன்றைய சூழ்நிலையில் சென்னை அரசாங்கத்திற்கு அறவே கிடையாது. அவ்வாறு கூறிக்கொள்ள முடியாத ஒரு நிலையில் சென்னை அரசாங்கத்தை, இந்தியப் பேரரசு தள்ளிவைத்திருக்கிறது.

சென்னையின் இயற்கை வளம், இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மற்ற மாநிலங்களின் வளத்தைவிடக் கூடியுள்ளதேயாகும். மேற்கூறிய வளங்களை, மக்களுக்குப் பயன்படும் வகையில் பண்படுத்தி செல்வப் பெருக்கத்திற்கு வழி காணும் உரிமையையும் அதிகாரத்தையும் சென்னை அரசாங்கம் இன்று பெற்றிருக்கவில்லை. அதற்கு நியாயமான பிறப்புரிமையாக உள்ள, இருந்துத் தீர வேண்டிய அதிகாரத்திற்கு பலம் பொருந்திய தளை பூட்டிவிட்டிருக்கிறது இந்தியப் பேரரசு. அதன் எதிரொலியாகத்தான், 'ஆறு நிறைய நீர் போனாலும் குக்கல் நக்கித்தானே தாகம் தணித்துக்கொள்ள வேண்டும்' என்ற மூதுரைக்கொப்ப சென்னை அரசாங்கம், மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முடியாத ஆற்றல் அற்ற ஒரு அரசாங்கமாக இருந்து வருகிறது.

உரிமைக்கும், அதிகாரத்திற்கும் வேண்டுமென்றே போடப்பட்டிருக்கும் வன்மையுள்ள வேலி அறுத்தெறியப்பட்டால் அல்லாது, தனது எல்லைக்குட்பட்டக் குடிமக்களுக்கு நல்வாழ்வு அளிப்பது என்பது சென்னை அரசாங்கத்தால் என்றும்முடியப் போவது அறவே கிடையாது.

வற்றாத வளந்தரும் வளமைகள் ஏராளமாக இங்கு இருந்த போதிலும்கூட, அவ்வளமைகளிலிருந்து வளத்தைப் பெறுவதற்கான அதிகாரம் சென்னை அரசாங்கத்திற்கு இல்லாத காரணத்தால், மக்களுக்கு நிலையான நல்வாழ்வைத் தேடித் தர முடியாத நிலையில் இருந்து வருவதுடன், செய்து வரும் சிறு நலத்திற்கும், வளமிழந்து வறுமையுடன் போராடிக் கொண்டிருக்கும் ஏழை உழவர் பெருமக்களின் அடிமடியையே ஒவ்வொரு ஆண்டும் தடவித் தீரவேண்டிய கட்டாயத்தில் இருந்து வருகிறது. பெரும்பான்மையான பொது மக்களின் ஆத்திரத்தையும் அதிருப்தியையும் வலியச் சென்று வரவேற்றுக் கொள்ளுகிறது.

ஒரு அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கும் வளரும் வரி இனங்கள் அனைத்தையும் தம் கையில் கெட்டியாகப் பிடித்து வைத்துக்கொண்டு, என்றும் வளருவதற்கு வகையற்றுக் கட்டைபாய்ந்துபோன நில வரியையும், நீர் வரியையும், விற்பனை வரியையும் சென்னை அரசாங்கத்திடம் தாராளமாக ஒப்படைத்திருக்கிறது இந்தியப் பேரரசு. கூண்டில் அடைக்கப்பட்டுள்ள கிளியைப் பார்த்து, ஒரு அடி தொலைவில் வேலியில் படர்ந்துள்ள கோவைக் கொடி, 'இதோ! உனக்கு விருப்பமான என் கனி! வா உண்ண! பறந்து வா உண்ண! என இசை அமுதூட்டி அழைத்தாலும், கூண்டுக்கிளி, கொத்தித் தின்ன கோவைக் கொடியிடம் செல்லவா போகிறது? செல்லத்தான் முடியுமா?

கூண்டுக் கிளியாக மட்டுமே சென்னை அரசாங்கத்தை இந்தியப் பேரரசு வைத்திருக்கவில்லை. அதன் சிறகுகளையும் மொட்டையாகக் கத்தரித்துவிட்டு, கூண்டிலும் தள்ளிப் பூட்டப்பட்ட கிளியாக ஆக்கி வைத்திருக்கிறது இந்தியப் பேரரசு.

வீடு நம்முடையதாக இருந்தாலும், பூட்டைத் திறந்து வீட்டினுள் நுழையவும், வாசம் செய்யவும் உரிமை நமக்கு இருந்தபோதிலும், அவ்வுரிமையும் யாதொரு கட்டுப்பாடும் இல்லாத உரிமையாகவும் நமக்கு இருக்கவில்லை. வீட்டின் பூட்டைத் திறக்கும் திறவுகோலை, வேறு ஒருவரிடம் கெஞ்சிக் கேட்டுப் பெற்றாக வேண்டும்.

வீட்டுக்குடையார் கெஞ்சிக் கேட்கிறார்களே, வீடும் திறவுகோலும் அவர்களுடையதுதானே, கொடுத்துவிடுவோம் என்று அவர் பெருந்தன்மையாகக் கருதி, மனமுவந்தும் திறவுகோலை, சொந்தக்காரராகிய நம்மிடம் கொடுக்கவும் மாட்டார். அவர் விரும்பினால் கொடுக்கலாம்; விரும்பாவிடில் திறவுகோலை கொடுக்கவும் மறுக்கலாம்.

இந்தியப் பேரரசின் வரி விதிப்பு இனங்கள் இவை இவை, மாநிலங்களின் வரி விதிப்பு இனங்கள் இவை இவை என்பதற்கு அரசியல் சட்டத்தில் ஏற்பாடு இருக்கிறது. இரண்டு இனங்களிலும் சேர்க்கப்படாத இனங்களில் வரி விதிக்கும் உரிமையை இந்தியப் பேரரசிடம் ஒப்படைத்திருக்கிறது அரசியல் சட்டம்.

மாநிலங்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள இனங்களில் ஒரு மாநில அரசாங்கம் வரி விதித்த போதிலும், அவ்வரி விதிப்பை நடைமுறைக்குக் கொண்டுவர இந்தியப் பேரரசின் தலைவர்தான் உயிர்தானம் கொடுத்தாக வேண்டும். அதன் பிறகுதான் மாநில வரி விதிப்பு ஏற்பாடு சட்டமெனும் உயிர் பெற்று உலாவ முடியும்.

நடுத்தர ஆலைத் துணிகள் மீது ரூபாய்க்கு 0—1—3 அணா விதம் விற்பனை வரி வசூலிக்க, சென்னை சட்டசபையில் சென்ற ஆண்டு ஒரு சட்டத்தை நிறைவேற்றியது சென்னை அரசாங்கம். இப்பொழுதுள்ள காமராஜர் அல்ல அப்பொழுது சென்னை அரசாங்கத்தின் முதல் அமைச்சராக இருந்தது. காங்கிரசின் முதல்தரத் தலைவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரியாக இருந்தக் காலத்தில் தான் மேற்கூறிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு, இந்தியப் பேரரசுத் தலைவரின் உயிர்தானம் இன்னமும் கிடைக்கவில்லை. அதற்கு உயிரூட்டுமாறு தலைவரை நெருக்க வேண்டும் சட்டசபையினர் என, அடிப்படை நிலைமையைத் தெரிந்து கொள்ளாத அல்லது தெரிந்தும் தெரியாதவர்போல் நடித்து வரும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம்.

தங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இனங்களில் சட்டமியற்றக்கூடிய உரிமை மாநில அரசாங்கங்களிடந்தான் விடப்பட்டிருப்பதாக அரசியல் சட்டம் உறுதி அளிக்கிறது. இருந்தாலும் சட்டசபைகளில் நிறைவேற்றப்படும் சட்டங்கள், உயிர் பெற்று செயல்படும் ஆற்றல் பெறுவது, இந்தியப் பேரரசு தலைவரின் தயவில் நடைபெற வேண்டியதாக இருக்கிறது. இவ்வேற்பாடும் அதே அரசியல் சட்டத்தில் தான் இருக்கிறது.

நமது வீட்டின் பூட்டைத் திறக்க நமது கையில் திறவுகோல் இருந்த போதிலும், அத்திறவு கோலால் மட்டும் நமது வீட்டின் பூட்டை நாம் திறக்க முடியாது. நமது கையில் உள்ள திறவுகோல் கொண்டு நமது வீட்டின் பூட்டை முதலில் திறக்க வேண்டும்; அப்பொழுதும் பூட்டு திறந்துவிடாது. அடுத்து இரண்டாவது முறையாக நமது பூட்டைத் திறக்க, வேறு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் எஜமான் திறவுகோல்(Master Key)தேவைப்படுகிறது.

இவ்வடிப்படை அதிகார உறவு முறையை ஒரு பொருட்டாகக்கொண்டுதான், சென்னை அரசாங்க அடுத்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதுபற்றி நாளை ஆராய்வோம்.

ரூ. 7 கோடி!

இவ்வாண்டில், சென்னை சர்க்கார் ரூ. 7 கோடிக்குக் கடன் பத்திரங்கள் வெளியிடலாம் என்று யூகிக்கப்படுகிறது.

இந்தியப் பேரரசில் உத்திர பிரதேசத்தவர் ஆதிக்கம்!

திராவிட மக்கள் சபை உறுப்பினரிடை தீவிர சிந்தனை!

இந்தித் திணிப்பை தமிழர் மட்டும் எதிர்க்கவில்லை

வங்காளிகளும் — பஞ்சாபிகளும்கூட எதிர்க்கிறார்கள்

"மத்திய மந்திரி சபையில், உ. பி. வாதிகள் அதிகபட்சம் ஆதிக்கம்பெற நேரிடுவதால், தென்னிந்திய எம். பி.-க்களிடையே சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அநேகமாக இந்தியாவின் 'லகான்' முழுவதுமே நாளடைவில் உ. பி.-யின் கையில் சிக்கிவிடும் என்று அவர்கள் அஞ்ச ஆரம்பித்துவிட்டனர்.

"மத்திய மந்திரிகளில் ஏழு பேர்கள் உ. பி.-யைச் சேர்ந்தவர்கள்; பார்க்கப்போனால், யதார்த்தமான தென்னிந்தியப் பகுதியிலிருந்து அதில் யாருமே இடம் பெற்றிருக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது......இந்த நிலைமை நீடிக்கப் படக்கூடாதென்றும், இது விஷயத்தில், நேரு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பிரஸ்தாப எம். பி.-க்கள் கூறுகிறார்கள்."

"மக்கள் சபையில் அதிகபட்சம் இந்தி மொழிப் பதங்கள் அடிபடுவதையும் அவர்கள் விரும்பவில்லை; தென்னிந்தியர்கள் மட்டுமல்ல—வங்காளிகளும் பஞ்சாபிகளும்கூட இதை ஆட்சேபிக்கிறார்கள்.

"இதுவரை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டுவந்த ஆட்சி நிர்வாகக் குறிப்புகள் ஆங்கிலத்திலேயே அமைந்திருந்தன; ஆனால் இப்போது அதை இந்தியிலும் வெளியிட ஏற்பாடாகியிருக்கிறது; இதுவும், இந்தியைப் பரப்புவதற்கான உபாயமென்றே கருதப்படுகிறது.

"இது பண்டித பந்தின் மூளையென்றும் எண்ணப்படுகிறது; நல்லெண்ண அம்சமாக வட இந்தியர்களும் தென்னாட்டு மொழிகளை கற்க வேண்டுமென்று பண்டித பந்த் விடுத்துள்ள வேண்டுகோள் சொல்லத்தக்க ஆதரவு பெற்றிருப்பதாகச் சொல்வதற்கில்லை."

இவ்வாறு, 26—2—55 'தின மலர்' இதழில், அதன் டில்லி நிருபர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரத் திட்டங்கள்

1955-56ம் ஆண்டைய சென்னை சர்க்கார் வரவு-செலவு-திட்டத்தில், குறிப்பிடப்பட்டுள்ள மூலதன மிடும் சில மின்சாரத் திட்டங்கள் விவரம் இங்கு தரப்படுகிறது:—

பைக்காரா வினியோகம்	ரூ 1,47,40,400
மொய்யார்	12,39,000
பைக்காரா விஸ்தரிப்பு (3-வது கட்டம்)	20,52,000
பொள்ளாச்சி ஸ்டேஷன்	7,38,600
தென் கன்னடத்துக்கு சப்ளை	12,07,700
மேட்டூர் வினியோகம்	2,09,39,500
சென்னை-மேட்டூர் லைன்	12,18,600
சேலம்-நாமக்கல் லைன்	25,49,300
விழுப்புரம்	80,31,600
நெய்வேலி-விழுப்புரம்	14,97,400
பாபநாசம்	1,56,66,300
„ (2-வது கட்டம்)	2,04,600
பெரியாறு	1,09,16,500

அழிவுக்கு இலக்கு!

ஒரு கண்டத்திலிருந்து மற்றோர் கண்டத்திற்குச் சென்று தானாகவே தாக்கக்கூடிய 'பறக்கும் குண்டு' ஒன்றை தயாரிப்பதில் அமெரிக்கா முனைந்துள்ளதாம்! வானில் பல மைல் தூரம் வேகமுடன் பறந்து, பின்னர், குறிப்பிட்ட இலக்கை இது தாக்குமாம்!

'ஒளி'யை விடவும் வேகமாகப் பல்லாயிர மைல்கள் பறக்கக் கூடிய குண்டுகளை தயாரிக்கவும் அமெரிக்க விஞ்ஞானிகள் பரிசோதனை செய்துள்ளனராம்!

காஷ்மீர் பிரச்சினை

பண்டிதரின் நிலை!

"காலம்தான் சென்று கொண்டே இருக்கிறதே தவிர, பிரச்சினைகள் அப்படியேதான் இருந்துவருகின்றன; அவை இருக்கும் வரையில் அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டுக் கொண்டேதான் இருக்கும்."

இவ்வாறு பிரதமர் பண்டித நேரு, "பாகிஸ்தான் பிரதமருக்கும், இந்தியப் பிரதமருக்குமிடையே நடைபெற இருக்கும் பேச்சு வார்த்தைகளில் புதிய நிலைமை ஏதாயினும் ஏற்பட்டுள்ளதா?" என்று மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும் வகையில் குறிப்பட்டார்.

"காஷ்மீர்இந்தியாவுடன்இணைந்ததை அந்த நாட்டு மக்கள் அங்கீகாரம் செய்துவிட்ட பின்னர், பேச்சு வார்த்தைகளுக்கான புதிய அடிப்படைகள் என்னென்னவாக இருக்க முடியும்?" என்ற மற்றொரு கேள்விக்கு அவர்பதிலளிக்கையில், "இத்தகைய ஒரு விஷயத்தை ஒரு தலைப்பட்சமாகத் தீர்த்துவிட முடியாது" என்று சொன்னார்.

60,000 சிவில் சப்ளை ஊழியர்கள்

வேலை இழந்தனர்; பலர் பட்டினியால் வாடுகின்றனர்

பாட்னா, பிப். 28—

"இந்திய சிவில் சப்ளை இலாகாவிலிருந்து நீக்கப்பட்ட சுமார் 60,000 பேர்களில் பெரும்பாலானோர், இன்று பட்டினியால் வாடுகின்றனர்,"

என்று, அந்த இலாகா ஊழியர் சங்கத் தலைவர் டி. ஆர். நாயக் என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

55 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தொடர்ந்து வேலையில் நிலைக்கச் செய்வதை நிறுத்தினால், வேலை இழந்தோரில் 5 முதல் 10 சதவிகிதம் வரை வேலைபெற முடியும்.

"பிரதம மந்திரி, மாநில முதன் மந்திரிகள், பிரதம காரியதரிசிகள், உணவு சப்ளை இலாகா மந்திரிகள் ஆகியோர் கொண்ட மாநாடு ஒன்று கூட்டி, வேலை இழந்தோரின் துயர் நீங்க வழிகாண வேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சூதாட்டம்-மதுவிலக்கு

ஆளும் கட்சியின் முடிவு

கட்சியின் வரலாறே கண்டறியாத அளவில், மிகக் கடுமையான விவாதத்திற்குப் பிறகு, இலங்கையில் மதுபானங்களுக்கும், சூதாட்டங்களுக்கும் அடியோடு தடைவிதிக்க வேண்டுமென ஐக்கிய தேசீயக் கட்சி (ஆட்சியில் உள்ளது.) முடிவு செய்துள்ளது.

வடக்கு வளையாமல் இருக்கும்போது தெற்கு தெண்டனிடவா வேண்டும்?

உலக மாதா பல நாடுகளாய் தனித்து வாழும்போது பாரத மாதா பிரிந்து வாழக்கூடாதோ?

மூலனூரில் பொதுச்செயலாளர்

"சமீபத்தில் நேரு சென்னைக்கு வந்திருந்தார்; நேருவை பழையகோட்டை பட்டக்காரர் சந்தித்திருக்கிருர்; அந்தச் சந்திப்பு பத்திரிகையில் படமாக வந்திருக்கிறது; அதில், நேரு கம்பீரமாக நிமிர்ந்து நின்று, எதையோ அலட்சியமாகப் பார்க்கிருர்; பட்டக்காரர் குனிந்து, வணங்கி நிற்கிருர்; 'வடக்கு வளைந்து கொடுக்காமல் இருக்கிறது—தெற்கு தெண்டனிட்டுக்கொண்டிருக்கிறது,' என்றுதானே அதற்கு அர்த்தம்? அந்தப் படத்தை நானும், தோழர் சம்பத்தும் கண்கலக்கத்தோடு பார்த்தோம்."

"பட்டக்காரர் மட்டுமல்ல; காமராசர் கதி என்ன? தேபர் யார்? அந்தச் 'சார்லி சாப்ளின்' மீசைக்கார மனிதருக்கு சென்னை நகர சபை வரவேற்பு கொடுத்தது; காமராசருக்கு டில்லி, பம்பாய், வரவேற்பு கொடுத்ததா? இல்லையே? ஆச்சாரியாருக்காவது அந்தச் 'சான்ஸ்' கிடைத்ததா? இல்லையே! 'மதறுஸ் வாலா' என்ருல் வட நாட்டவர் வாழ்த்த மாட்டார்கள்—பணிய மாட்டார்கள்."

"இந்திய அரசியல் திட்டத்தில் பட்சவாதம் புகுந்துவிட்டது; அதற்கு மருந்து கொடுப்பது திராவிட முன்னேற்றக் கழகம்; 'வடக்கு—தெற்கு பேதம் ஏன்? பாரத மாதா ஒரே தாய் அல்லவா?' என்று கேட்கிருர்கள்; உலக மாதா தனித்து, தனித்து வாழும்போது, நாம் ஏன் தனித்து வாழக்கூடாது? எல்லோரும் சேர்ந்து பெற்ற சுதந்திரத்தை ஏதோ அவர்கள் மட்டுமே பெற்றதைப்போல், நம்மை அடக்கி ஆளுகிருர்கள்; இந்து தேச சரித்திரம் கூறுகின்றது— 'வட நாட்டான் பரம்பரை தோல்விப் பரம்பரை'—என்று; தமிழ்நாட்டு வரலாறு—'வெளி நாட்டாரைத் தோற்கடித்தார்கள்'—என்பது; தோல்விப் பரம்பரை வெற்றிப் பரம்பரையை வீழ்த்துவதா?"

—என்று, 24—2—55-ல், கோவை மாவட்டம், தாராபுரம் வட்டம் மூலனூரில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில், பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"இங்கே நீங்கள் இவ்வளவு திரளாகக் கூடி எங்களை வரவேற்றதற்கு என் நன்றி.

"இங்கே ஆற்றல் வாய்ந்த இளைஞர்களைக் காண்கின்றேன்; அனுபவம் உள்ள பெரியோர்களின் நல்லார்வத்தை காண்கின்றேன்; இந்த வட்டத்தில் கிளைக் கழகங்கள் அதிகம் என்பதறிந்து மகிழ்கின்றேன்; உங்களுடைய நல்லார்வம் மேலும் மேலும் வளர்ந்து பணிபுரிய வேண்டுகின்றேன்.

"நான் பேசுவதற்கு முன், வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டேன்' வெற்றிலை பாக்கு போடுவதற்கு முதலில் பாக்குவேண்டும்—பின்னர் வெற்றிலை வேண்டும்—கடைசியில் சுண்ணும்பு வேண்டும்; இந்த மூன்றும் முறைப்படி சேர்ந்தால்தான் வெற்றிலைபாக்கு போட்டுக் கொள்வதில் அர்த்தம் உண்டு.

"அதுபோல், பாக்கு என்னும் சமுதாயத்தைத் திருத்தி, வெற்றிலை என்னும் அரசியலை கட்டி வளர்த்து, பொருளாதாரம் என்னும் சுண்ணும்பை ஏற்படுத்தி திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்று சொல்கின்ருேம். இந்த மூன்றும் ஒன்று கூடுகின்ற திட்டம்தான் தேவை—ஒன்றுபடுத்துகின்ற தன்மைகளை தெரிந்துகொள்ள வேண்டும்.

"சமுதாயத்திலே உள்ள பேதங்கள், பிளவுகள் அகற்றப்படவேண்டும்—என்று ஆவடியிலே தீர்மானம் நிறைவேற்றுவார்களே தவிர, காரியத்தில் ஏதும் செய்யமாட்டார்கள்.

"சாதி பேதங்கள் ஒழிய சமுதாயத் துறையில் பாடுபட்டு வரும் இயக்கம்—சுயமரியாதை இயக்கம் ஒன்றுதான்; அதனுடைய கூர்வாள்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

"உலகத்தில் உள்ள மற்றநாடுகளில் சாதி பாகுபாடு, பேதங்கள் இல்லை; இங்கிலாந்திலே படையாச்சி இல்லை; ஜெர்மனியிலே செட்டியார் இல்லை;

"திராவிட முன்னேற்றக் கழகம் மனிதனை அழைக்கின்றது; மற்ற நாட்டு மக்களைப்போல் முன்னேற்றமடைய, நாகரிகமடைய, சாதிப்பித்து ஒழிய வேண்டுமென்கிறது.

"மேலை நாடுகள், காலப்போக்கில் பல நூதனங்களைக் கண்டுபிடித்தன; நாம் எதைக் கண்டுபிடித்தோம்? கருடன் பறப்பதைப் பார்த்தோம்—'மகாவிஷ்ணுவின் வாகனம்' என்ருேம்; மீன் நீரில் மூழ்கி செல்வதைப் பார்த்தோம்—'மச்சாவதாரம்' என்ருேம்;—கதை கட்டத்தான் தெரிந்தது.

"கருடனைப் பார்த்த மேலை நாட்டான் ஆகாய விமானம் கண்டுபிடித்தான்; மீன் நீரில் மூழ்கி செல்வதைப் பார்த்து, நீர் மூழ்கிக் கப்பல் கண்டுபிடித்தான்; பானையில் தண்ணீர் கொதித்து, ஆவி கிளம்பி, மூடியுள்ள தட்டு கீழே விழுந்தபோது, நம்மவர், 'பூதம் செய்யும் வேலை,' என்றனர்; மேலை நாட்டில், ஒருவன், காபி வைத்துக் கொண்டிருந்தான்—மேலே மூடியிருந்த தட்டை, கொதிக்கும் தண்ணீரின் ஆவி கீழே தள்ளும் சக்தியைத் தெரிந்தான்—நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்து, ரயில் ஓட்டும் நீராவி எஞ்சினைக் கண்டுபிடித்தான்; இதனுல்தான் சொல்கின்ருேம்—'அறிவை திருத்திக் கொள்ளவேண்டும்; எதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்,'—என்று!

"திராவிட நாடு திராவிடருக்கு என்று சொல்கின்ருேம்—இன்று மட்டும் சொல்லவில்லை—காங்கிரஸ் பதவிக்கு வராத நேரத்தில்—1935-ம் ஆண்டு திருவாரூர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்ருேம்—'தமிழ் நாடு—தமிழருக்கே' என்று!

"காங்கிரஸ் பதவிக்கு வந்த இந்த 8 ஆண்டு காலத்தில், 'திராவிட நாடு-திராவிடருக்கே' என்ற லட்சியத் திட்டத்தின் மூலக் கருத்து மக்களுக்கு நன்கு புரிந்துவிட்டது.

"8 ஆண்டுகளாக வடநாட்டை வளர்க்க காங்கிரஸ் செய்யும் சூழ்ச்சிகளை 1000 கூட்டங்களிலே சொல்லி இருக்கின்ருேம்; காங்கிரசார் மறுத்ததில்லை; ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்ட ஆட்சியின் பயனுக நமது மக்கள் வறுமையில் உழலுகின்ருர்கள். காங்கிரஸ் ஆட்சியிலே யார் வாழ்ந்தார்கள்? காங்கிரசிலே உள்ள பிரபுக்களும், கவர்னர்களும், மந்திரிகளும்தான் வாழ்ந்தார்கள்; ஓலைக் குடிசை ஓட்டு வீடாகவில்லை; பள்ளிக்கூடம் இல்லை; தொழிற்சாலை இல்லை; வரி குறையவில்லை.

"காமராசர் பேசுகின்ருர்—'வெள்ளைக்கார ஆட்சியைவிட மக்கள் இப்போது அதிக வரி தருகின்ருர்கள்; வரி குறையவில்லை,' என்று. இவ்வளவு வரி வசூலித்து என்ன செய்தார்? 'நாங்கள் மக்களுக்கு செலவு செய்கின்ருேம்,' என்ருர். இப்பொழுது 400 கோடி ரூபாய் வருமானத்தில் 208 கோடி ரூபாய் இராணுவத்திற்கு செலவு செய்யப்படுகிறது; உலகத்தில் யுத்தம் இல்லை; நேருவை அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் அழைக்கின்றது; உலக எதிர்ப்பே இல்லாத இக்காலத்தில், இவ்வளவு பணத்தை இராணுவத்திற்கென வாரி இறைப்பானேன்?

"தெய்வங்கள் பெயரே வடவருக்குத் தெரியாது. தாயுமானவர், பட்டினத்தார், வடலூர் ராமலிங்க அடிகள், திருவள்ளுவர் தெரியாது; காமராசர், பக்தவத்சலம், ஆச்சாரியார் இவர்கள் பெயரால் ஒரு பூங்கா, தெரு, சதுக்கம் கிடையாது.

"வெள்ளைக்காரன் இந்தியா பூராவையும் கட்டி ஆண்டு கொள்ளை அடித்தானே, அதே போல் காங்கிரஸ் ஆட்சி செய்கின்றது. 5 ஆண்டுத் திட்டத்தில் ரூ. 2069 கோடி ஒதுக்கப்பட்டது; இதில், வடநாட்டிற்கென ரூ. 100-கோடி, ரூ. 150 கோடி, ரூ. 120-கோடி, ரூ. 180 கோடி என ஒதுக்கி விவசாயம், மின்சாரம், தொழிற்சாலையை பெருக்கிக் கொண்டார்கள்; இங்கே பவானி சாகர் அணைக்கட்டை கட்டினுர்கள்—அதுவும் வெள்ளைக்காரன் காலத்தில் திட்டமிடப்பட்டது; ரூ 2,000 கோடியில் தென்னுட்டுக்கு ரூ 200 கோடிதான் என்று அவர்களே ஒத்துக் கொள்கின்ருர்கள்; ஏன் ரூ. 1,000 கோடி ஒதுக்க வேண்டாமா?

"தென்ஆற்காட்டில் நிலக்கரி கிடைக்கின்றது; சேலத்தில் இரும்பு கிடைக்கின்றது; எஃகு உற்பத்தித் தொழிற்சாலை இனி யாவது ஏற்படுத்துவார்களா என்ருல், அது சந்தேகமே!

"ஆவடி மாநாட்டு வரவேற்புரையில், தோழியர் அம்புஜம்மாள் 'எல்லாம் வடநாட்டுக்கே செய்து கொள்கின்ருர்கள்,' என்ற குறைபாடு இங்கே இருக்கின்றதென்று கூறினுர்கள். அதற்கு தேபரோ, நேருவோ, வடநாட்டுத் தலைவர்களோ அந்த குறைபாட்டுக்கு பதில் சொல்லவில்லை.

"இரண்டாவது 5 ஆண்டுத் திட்டம் வருகின்றது; ரூ. 5000 கோடி, ரூ. 8000 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. எவ்வளவு செலவு செய்தாலும் தென்னுட்டுக்கு பெரும் பகுதியை செலவழிப்பார்களா? ஒருக்காலும் செலவழிக்கமாட்டார்கள். நம்முடைய வரிப்பணம், தொழில், செல்வம் எல்லாம் மார்வாடி, குஜராத்தி ஆதிக்கத்திலே உள்ளது.

"நாம் விடுதலை பெற, கிளர்ச்சி, அறப்போராட்டம் துவக்கப்படுகின்ற நேரத்தில், நீங்கள் பேராதரவு தர வேண்டுகிறேன். நமது மாண்பை, கொள்கையை, சிறப்பினை மற்றவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டுகிறேன்."

★

பொதுக் கூட்ட விவரம்

கோவை மாவட்டம் தாராபுரம் வட்டம் மூலனூரில் 24—2—55ல், தானது.

தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுற்று வட்டங்களில் உள்ள கிளைக் கழக தோழர்கள், பொது மக்கள் திரண்டெழுந்து குழுமி இருந்தனர். பொதுச் செயலாளர் அண்ணுதுரை, சம்பத் வருகையை எதிர்நோக்கி மக்கள் பேரார்வத்துடன் பாதையில் கூடியிருந்தனர். தலைவர்கள் வந்ததும் மாலைகள் சூட்டி தோழர் கே. எஸ். சிரங்கராயர் வரவேற்ருர். வரவேற்பு வளைவுகளும், தோரணங்களும் ஊர் முழுவதும் கட்டியிருந்தனர். ஊர்வலம் சிறப்புடன் நடைபெற்றது.

கூட்டம் மாலை 7 மணிக்கு துவங்கியது. தோழர் எஸ். எம். ராமசாமி அவர்கள் தலைமை தாங்கினுர் மக்களின் கழக இலட்சிய முழக்கத்திற்கிடையே பொதுச் செயலாளர் அண்ணுதுரை கழகக் கொடியை உயர்த்தினுர்.

பின்னர் தோழர்கள் எஸ். அப்பாவு, உடுமலையான் இருவரும் சிறியதோர் உரை நிகழ்த்தினுர்கள்.

தோழர் அ. பொன்னம்பலனுர் சமுதாய நிலைகுறித்து அரியதோர் உரை நிகழ்த்தினுர்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் பொதுக் குழு தீர்மானங்களின் அடிப்படையில் சொற்பெருக்காற்றினுர்.

பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள், கழக இலட்சியங்கள் குறித்து புதுமைக் கருத்துக்கள் கமழ, நல்லதோர் விரிவுரை ஆற்றினுர். செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

தலைவர்களுக்கு சுற்று வட்டத்தில் உள்ள 25-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி துண்டுகளும் அணிவிக்கப்பட்டது.

துணைச் செயலாளர் சோமு அவர்களின் குழந்தைக்கு பொதுச் செயலாளர் அண்ணுதுரை, 'பாண்டியன்' என பெயர் சூட்டியதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2. அளிக்கப்பட்டது. சுற்று வட்டத்திலுள்ள ஊர் பெரியவர்களின் உபசரிப்பு மகத்தானது.

'வடகலை-தென்கலை' வேறுபாடுஏன்

பகவான் புகழ்பாடி பயன் என்ன?

நாமதாரிகளுக்குக் கண்டனம்!

"'நீளமான நாமமும், நயமான சொல்லும் வஞ்சனைக்காரர்களின் அறிகுறிகள்'—என்று பொருள்படும்படி இந்துஸ்தானி மொழியில் ஒரு பழமொழி உண்டு; இதை பக்தர்கள் நிரூபிக்கிருர்கள்,"

என்று, டாக்டர் அத்திப்பட்டு ரங்கண்ணு என்பவர், திருமலையில் நடந்த பக்தர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்—

நாமம் போடுவது பற்றி வைணவர்களிடையே இருந்து வரும் கருத்து வேற்றுமையினை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

"பக்தர்கள் ஒன்று கூடி ஆண்டவனின் புகழ் பற்றி பாடுகிருர்கள்; ஆனுல், நாமம் சம்மந்தமாக, 'வடகலை—தென்கலை' என்று வைணவர்களிடை கருத்து வேற்றுமை இருந்து வருகிறது; இந்த நிலையில் பகவான் மீது புகழ் பாடுவதால் என்ன பயன்?" என்ருர்.

நெய்யில் செய்யப்படும் கலப்படம்

பக்தவத்சலம் படப்பிடிப்பு

"பொது மக்களுக்குக் கிடைக்கிற குறைந்த அளவு நெய்யும் பெரும்பாலும் கலப்பட நெய்யாகவே இருப்பது பரிதாபத்திற்குரிய விஷயமாகும். தொழில் நுணுக்க அறிவு வளர வளர 'புத்திசாலித்தனமா'ன கலப்பட முறைகளும் வளர்ந்து கொண்டே வருகின்றன. கடைத்தெருக்களில் விற்கப்படும் நெய்யில் 5 முதல் 100 சதவிகிதம் வரையிலும் தாவர அல்லது மிருகக் கொழுப்போ, அல்லது மாவு பதார்த்தமோ, அல்லது இவற்றைவிட கெடுதல் பயக்கக்கூடிய பிற சரக்குகளோ கலப்படம் செய்யப்படுகின்றன என்பது மிக மிக வேலைத்திற்குரிய—மானக்கேடான செய்கையாகும். கலப்பட அளவு, பெருமளவுக்கு அதிகரித்திருப்பதால், சுத்த நெய் கிடைப்பதென்பதே இப்போது மிகக் கடினமாக இருக்கிறது. இதை நினைத்துப் பார்த்தால், காலம் செல்லச் செல்ல 'சுத்த நெய்' என்பது ஒரு கடந்த கால 'நினைவுப் பெயரா'கவே ஆகிவிடும் போல் தோன்றுகிறது."

இவ்வாறு, அமைச்சர் எம். பக்தவத்சலம், நேற்று சென்னை—ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற நெய் விற்பனை முறை மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.

"கலப்படத் தடைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க அதிக வசதி இல்லாமலிருப்பதோடு, நெய்யின் இரசாயன சிக்கல் காரணமாகக் கலப்படத்தை நிரூபிப்பதும் கஷ்டமாக இருக்கிறது.

"சென்னை மாநிலத்தில் சுமார் 13,800 டன் நெய் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 700 டன்களை உற்பத்தியாளர்களே உபயோகித்துக் கொள்ளுகின்றனர். பிற மாநிலங்களிலிருந்து சுமார் 1200 டன் நெய் இறக்குமதி செய்யப்படுகிறது. பொதுவாக சென்னை மாநிலத்தின் தேவை 12,000 டன், அதாவது ஒருவருக்கு ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் நெய்யின் அளவு 2 ராத்தலாகும்."

மேலும் அவர், நெய்யின் தரத்தை ஒழுங்குபடுத்த 'அக் மார்க்' முத்திரையிடும் முறை கடந்த 1933-ம் ஆண்டில் அமுலுக்கு வந்ததென்றும், ஆனுல் நாட்டில் உற்பத்தியாகும் மொத்த நெய்யில் 2 சதவிகிதம் மட்டும்தான் இம்முறைப்படி விற்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பாலில் 43 சத விகிதம்தான் நெய்யாக்கப்படுகிறது என்றும், அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மொத்தம் 2 லட்சம் மணங்குக்கு மேற்பட்ட நெய் முழுவதும் இங்கேயே உபயோகிக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

மாநாட்டில் தீர்மானங்கள்

இந்த மாநாட்டில், வெண்ணெய், நெய் வியாபாரிகள் சங்கத்தை ஆரம்பிப்பதென சிபாரிசு செய்து கொள்ளப் படுகிறது.

பண்டங்கள் கலப்படத் தடைச் சட்டத்தைக் கடுமையாக அமுல் நடத்த வேண்டுமென்றும், நெய் வியாபாரிகளுக்கு கடுமையான அடிப்படையில் விற்பனை அனுமதி (லைசென்ஸ்) வழங்கப்பட வேண்டுமென்றும், 'அக் மார்க்' நெய்யின் உபயோகம் பற்றிப் போதிய பிரச்சாரம் செய்ய கூட்டுறவு இயக்கம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் மற்றும் இரண்டொரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மக்கள் முன்னேற்றக் கட்சியில் பதவிப் போட்டி?

ஒரே கொடியை இரு பிரிவினரும் பறக்கவிடும் கோலம்!

ஒரே பெயரில் இரு செய்தித் தாள்கள்!

ஜார்ஜ்டவுன், பிப். 27—

கயானா மக்கள் முன்னேற்றக் கட்சி யாருக்குச் சொந்தம் என்பதில் டாக்டர் ஷெட்டி ஜகன் கும்பலுக்கும், பர்ணும் கும்பலுக்கும் சென்ற மாத முடிவில் ஏற்பட்டத் தகராறின் காராணமாக, போட்டி பலமாக இருந்து வருகிறது. இருசாராரும் மேற்படி கட்சியின் பெயரால், இரு இடங்களில் கட்சி நிலையங்களைத் துவங்கி செயல்படுகின்றனர். கோடியும் ஒன்ருகவே இருக்கிறது. இப்போக்கு கட்சியினரிடை பெரும் திகைப்பைக் கோடுத்திருக்கிறது.

தாங்கள்தான் மக்கள் முன்னேற்றக் கட்சியின் பிரதிநிதிகளென, டாக்டர் ஜெகன் தம்பதிகள், பழைய இடத்தை மேற்படி கட்சி அலுவலகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். கட்சியின் 'தலைமை நிலயம்' என்ற பெயர்ப் பலகையும், கட்சியின் கருப்புக் கொடியும் அங்கு எப்பொழுதும்போல் இருந்துவருகின்றன.

அதற்கு அருகாமையிலேயே 'ம. மு. கட்சியின் தலைமை நிலயம்' என்ற பெயர்ப் பலகை தொங்கவிடப்பட்டுள்ளதும், அதே கருப்புக் கொடி பறந்துகொண்டு இருப்பதுமான ஒரு கட்டிடம் இருந்துவருகிறது. அங்குபர்ணும் ஜெய்நாராயண சிங்கும் மேற்படி கட்சியின் முக்கியஸ்தர்களாக இருந்துவருகிருர்கள்.

மக்கள் முன்னேற்றக் கட்சி ஆதாரபூர்வமான ஏடாக 'இடி' என்ற பெயரிய இதழ் ஒன்றை பர்ணும் கும்பல் சென்ற வாரத்தில் வெளியிட்டிருக்கிறது. எற்கனவே வெளிவந்துக்கொண்டிருந்த கட்சி இதழான 'இடி' வழக்கம்போல் தோழியர் ஜெகனை ஆசிரியையாகக்கொண்டு, டாக்டர் ஜெகன் அவர்களால் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்தியப் பேரரசின் வரவு-செலவுத் திட்டம்

இராணுவ செலவு வருமானத்தில் பாதியாகிறது

துண்டு விழும் தொகை 340 கோடி; சரிக்கட்ட புது வரி விதிப்புகள்

புதுடில்லி, பிப். 28—

இந்தியப் பேரரசின் 1955–56ம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை நிதி மந்திரி தேஷ்முக் மக்கள் சபையில் தாக்கல் செய்திருக்கிருர்.

தற்போதைய வரிவிகித ஆதாரப்படி இந்த ஆண்டு வருமானம் ரூ. 468·76 கோடி என்றும், செலவு ரூ. 498·93 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது; ரூ. 30·17 கோடி துண்டு விழுகிறது.

துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்காக வரி விகிதங்களில் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன; என்ருலும், இவை மூலம் கிடைக்கும் வருமானம் ரூ 21·70 கோடிதான்; எனவே, இன்னும் ரூ. 8·47 கோடி துண்டு விழுவதாகத் தெரிகிறது.

வருமான வரி விதிப்பு விகிதங்களை மாற்றுதலின் மூலம் கிடைப்பது ரூ. 8·7 கோடி; இதில் மாநிலங்களுக்குச் செல்லும் பங்கு ரூ. 4·2 கோடி; போக மிஞ்சுவது ரூ. 4·5 கோடிதான்.

சர்க்கரைக்கு விதிக்கப்படும் உள்நாட்டுச் சுங்க வரி அந்தர் ஒன்றுக்கு ரூ. 3—12—0 ஆக இருப்பது, ரூ 5—10—0 ஆக உயர்த்தப்படுகிறது. இதன் மூலம் கிடைப்பது ரூ. 5 கோடி.

உயர்ந்த ரக (சூப்பர் பைன்) துணிகள்மீது சதுர கெஜத்திற்கு வரி விதிப்பு இனி ரூ. 0—12—6 ஆக இருக்கும்; மற்றவை மீது சதுர கெஜத்திற்கு ரூ. 0—1—0 வீதம் இருக்குமாம்.

பருத்தி ஜவுளிகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தவை இனி இரண்டு வகையாக மட்டுமே பாவிக்கப்படுமாம்.

ஒரு கெஜ நீளத் துணிக்கு காலணா வீதம் விதிக்கும் 'செஸ்' வரியும் உண்டு; இது கைத்தறிகளின் அபிவிருத்திக்காக இருக்கும்.

இந்த மாறுதலால், ரூ 9 கோடி அதிக வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

1954—55-ல், ரூ. 15·36 கோடி துண்டு விழுமென எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், ஆண்டு இறுதியில் இது ரூ. 5 கோடியாகக் குறைந்திருக்கிறது.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக செலவு செய்து மொத்தமாக ரூ 340 கோடி துண்டு விழுந்தாலும், உற்பத்தி பெருக்குக் காரணமாக பணவீக்க விளைவு எற்படுமோவென அஞ்சத் தேவையில்லை என்று நிதிமந்திரி சபையில் அறிவித்துள்ளார்.

வரும் ஆண்டில் மொத்தத்தில் துண்டு விழுமென எதிர்பார்க்கப்படும் தொகை ரூ. 340 கோடியாம்.

வரும் ஆண்டில் சாதாரண செலவில் துண்டுவிழும் தொகை ரூ. 30 கோடி; மூலதனச் செலவு, மாநில சர்க்கார்களுக்கு கடன் ரூ 578 கோடி; இவ்வாண்டில் தீர்க்க வேண்டிய கடன் ரூ. 69 கோடி-இவைகளுக்கு வழி செய்ய வேண்டுமாம்.

கடன் எழுப்புவதின் மூலம் ரூ. 125 கோடி; சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 52 கோடி அந்நிய உதவி மூலம் ரூ 74 கோடி: மற்றவகைகளில் ரூ 86 கோடி-வருமானம் கிடைக்கும் என்ருலும். இன்னும் ரூ. 312 கோடி துண்டு விழுவதாகவும், சபையில் கணக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது. இது கண்டு கலவரமடையத் தேவையில்லை என்றும் நிதிமந்திரி அபயமளித்திருக்கிருராம்.

மொத்தமதிப்பீட்டுச் செலவான ரூ. 498·93 கோடியில், இராணுவச் செலவு மட்டும் ரூ. 202·68-கோடியாக இருக்குமாம். இத்தொகை 1954—55-ம் ஆண்டுச் செலவை விட ரூ. 4·66 கோடி அதிகம் என்று தெரிகிறது.

★

வருமானவரி விகிதங்களில் மாறுதல்

திருமணமானவர்கள்:

திருமணம் செய்துகொண்டுள்ள ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு இந்து குடும்பத்திற்கும்,

(1) மொத்த வருமானத்தில் முதல் 2,000 ரூபாய்க்கு வருமான வரி கிடையாது.

(2) அடுத்த ரூ. 3,000-க்கு ரூபாய்க்கு முக்காலணா.

(3) அடுத்த ரூ. 2,500-க்கு ரூபாய்க்கு ஒன்றே முக்காலணா.

(4) அடுத்த ரூ. 2,500-க்கு ரூபாய்க்கு இரண்டேகால் அணா

(5) அடுத்த ரூ. 5,000-க்கு ரூபாய்க்கு மூன்றே முக்கால் அணா

(6) மீதமுள்ள வருமானத்திற்கு ரூபாய்க்கு 4 அணா.

மணமாகாதவர்:

திருமணமாகாத ஒவ்வொருவருக்கும் வருமான வரி விதிப்பு கீழ்க்கண்ட விகிதத்திலிருக்கும் :—

(1) மொத்த வருமானத்தில் முதல் ரூ. 1,000-க்கு வரி இல்லை

(2) அடுத்த ரூ. 4,000-க்கு ரூபாய்க்கு முக்காலணா.

(3) அடுத்த ரூ. 2,500-க்கு ரூபாய்க்கு ஒன்றே முக்கால் அணா

(4) அடுத்த ரூ. 2,500-க்கு ரூபாய்க்கு இரண்டேகால் அணா

(5) அடுத்த ரூ. 5,000-க்கு ரூபாய்க்கு மூன்றேகால் அணா.

(6) மீதமுள்ள தொகைக்கு ரூபாய்க்கு நாலணா.

இதுவன்றி ஒவ்வொரு அடுக்குக்கும் வரி விகிதத்தில் 20-ல் ஒரு பங்கு 'சர் சார்ஜ்' விதிக்கப்படும்

இந்த வரி விதிப்பில் மணமானவர்களுக்கு சலுகை தரப்பட்டிருப்பது தெரியலாம்.

கங்கை மீது மற்றொரு பாலம்!

கங்கை நதி மீது, பீகாரில் உள்ள மொஹமீம கட்டத்தில் கார், இரயில் பாலங்கள் அமைப்பதற்கான திட்டத்திற்கு இதுவரை ரூ. 2 கோடி செலவிடப்பட்டுள்ளதாம்.

இன்னும் தேவையான நிலம், இடம் இவற்றைப் பெற்று பாலங்களை வெகு விரைவாக முடிப்பதற்கு கலெக்டருக்கான அதிகாரத்துடன் கூடிய விசேட அதிகாரியும் நியமிக்கப்பட்டு வேலை துரிதமாக நடைபெற்று வருகிறதாம்.

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

மார்ச் 6: திருச்சி
7: மகாதானபுரம்
13· வேலூர்
14: காவிரிபூம்பட்டினம்
15: வல்லம்படுகை
16: துவரங்குரிச்சி
17: கீரமங்கலம்

ஏன் நடுநிலைமை?

"கட்டாயப்படுத்தி வேலைவாங்குதலைக் கண்டிப்பது பற்றிய பிரச்சினை, ஐ. நா. சமூக, மனிதப் பண்பு, கலாசாரக் கமிட்டியில் எழுந்தபோது, இந்தியப் பிரதிநிதி, அப்பிரச்சினை பற்றி நடுநிலை வகித்தது உண்மையா?" என்ற கேள்விக்கு, "ஆம்; இந்திய சர்க்கார் பிரதிநிதி 'ஓட்' அளிக்காது விலகியிருந்தார்; எனெனில், கட்டாயப் படுத்தி வேலை வாங்குதலைக் கண்டிப்பது பற்றிய பிரச்சினை, மனிதப் பண்பைக் கருத்தில் கொண்டு ஆராயப்படாமல், அரசியல் நோக்குடன் ஆராயப்பட்டது என்பது எங்களுடைய அபிப்பிராயம்," என்று மக்கள் சபையில் சர்க்கார் தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

இல்லவே இல்லை!

"ஆவடியில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில், தேசீய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களின் சேவை பயன்படுத்தப் படவேயில்லை," என்று, மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

பதவி பறிக்கப்பட்டாலும் ஆதிக்கமிருந்தால் போதுமாம்!

ம. பி. முதல் மந்திரியின் புதிய நிபந்தனை!

குவாலியர், பிப் 28—

மத்திய பாரத் மாநிலத்தில் முதன் மந்திரி பதவிக்காக பலத்த 'லடாய்' இருந்து வருகின்றது

முன்னாள் முதன் மந்திரியான தாக்கட்மால் ஜெயின் என்பார், முன்பு இருமுறை சட்டசபைத் தேர்தல்களில் நின்று தோற்ருர்; அண்மையில் ஒரு உபதேர்தலில் வெற்றி பெற்று சட்டசபைக்கு வந்துள்ளார்.

பிரபலமான காங்கிரஸ் தலைவர் என்பதுடன், முன்னாள் மந்திரி என்ற பின்னணியும், அவருக்கு, மீண்டும் தானே முதன் மந்திரியாக வேண்டும் என்ற ஆசையை வளர்த்தன.

இப்போது மிஸ்ரிலால் கங்வால் என்பவர் முதன் மந்திரியாயிருந்து வருகிருர்.

அவர் இதுநாள்வரை, ஜெயின் சட்டசபைக்கு வந்தால், தலைமையை அவருக்குத் தந்துவிடத் தயாராயிருப்பதாகப் பேசி வந்திருக்கிருர்; ஆனால், ஜெயின் சபைக்கு வந்துள்ள இப்போது தலைமை இடம் தரமுடியாது என்று கூறிவருகிருராம்.

இதனால் ஜெயின் டெல்லி சென்று அங்கு காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டுத் திரும்பியுள்ளாராம்

அவர் கங்குவாலுடன் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பற்றி விவாதிப்பார் என்றும் கூறப்படுகிறது.

அகில இந்திய காங்கிரஸ் தலைமை மத்திய பாரத் சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளபடி தாக்கட்மால் ஜெயின் எல்லோருடைய ஆதரவாலும் முதன் மந்திரியாக வேண்டும் என்று விரும்புவதாகத் தெரிகின்றது.

கங்குவால் தன்னுடனிருக்கும் ஒரு மந்திரி,இரண்டு துணை மந்திரிகள் ஆகியோரை ஜெயின் தமது மந்திரி சபையிலும் சேர்த்துக் கொள்வதாக உறுதியளித்தால் தாம் முதன் மந்திரி பதவியை விட்டு விலகிவிட தயாராயிருப்பதாகவும் கூறியிருக்கிருராம்.

ஆனால் ஜெயின் இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுப்பதனால் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் கருத்தறிவித்துள்ளன.

இந்த உக்கிரமான சண்டை, மத்திய பாரத் மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளதாம்.

காலம் மாறுமா? காதல் மீளுமா?

அருமனைப் பகுதியிலிருக்கும் சித்ருல் எனும் ஊரில், வாசு என்பவரது வீட்டிற்கு முன்னால், போத்தான் எனும் அரிசனர் ஒருவரது மகள் கடந்த சில தினங்களாகச் சத்தியாக்கிரகம் இருந்து வருவதாகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அந்த அரிசனப் பெண்மணி, மேற்படி வாசுவினுடைய புரையிலேயே வசித்துவந்ததுடன், அவரது வயல் வேலைகளையும் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்ததாகவும், இதனிடையே வாசுவுக்கும், அந்தப் பெண்மணிக்கும் தொடர்பு ஏற்பட்டு, அப்பெண்மணி கர்ப்பவதியாகி ஆண் குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்ததாகவும், அப்பெண்மணி குழந்தை பெற்று சுமார் 3 வாரங்கள் ஆகிவிட்ட பின்னரும் கூட, மேற்படி நபர் அப்பெண்மணியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

இப்போதுஅப்பெண்மணி, வாசு, தன்னை ஏற்றுக்கொள்ளும் வரையிலும் அவருடைய வீட்டிலேயே சத்தியாக்கிரகம்;இருக்கப்போவதாகக் கூறி, கடந்த சில நாட்களாக அப்படியே செய்து வருகிருராம்.

அப்பெண்மணியின் பிரசவத்திற்கான எல்லா செலவுகளையுமே வாசுதான் ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓயாத ஒழியாத கோஷ்டிச் சண்டை

டெல்லி சட்டசபை சபாநாயகர்—டாக்டர் சுசிலா நாயர் தேர்வு

புதுடில்லி, பிப். 28—

டெல்லி மாநிலத்தின் முன்னாள் சுகாதார மந்திரியான டாக்டர் சுசிலா நாயர் டெல்லி சட்டசபை சபாநாயகராகத்தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

அவரை எதிர்த்து நின்ற ராஜா ஜங் பகதூர் சிங் என்ற சுயேச்சையும், ஹரிசந்த் என்ற ஜனசங் உறுப்பினரும் தோற்றனர்.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முதலாக ஒரு மாநில சட்டசபையின் தலைவியாக தேர்ந்தெடுக்கப்படும் பெண்மணி இவரேயாம்.

இந்த தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியில் பலத்த கருத்துவேறுபாடு நிலவியதாம்.

டெல்லி சட்ட சபை காங்கிரஸ் கட்சியில் முதன் மந்திரியாயிருந்த பிரஹம் பிரகாஷ் கோஷ்டிக்கும், இன்னுமொரு கோஷ்டிக்கும் கருத்துவேறுபாடு நிலவியதின் பயனாய் பிரஹம்பிரகாஷ் ராஜினாமாச் செய்தார். பின், பண்டித பந்த் இரு கோஷ்டிகளிடையேயும் சமரசம் ஏற்பட்டுவிட்டதாக அறிவித்தார்.

ஆனால் இப்போது கட்சித் தலைவரிடமே சபாநாயகருக்கு யாரை நிறுத்துவது என்ற பொறுப்பைத் தருவதா, அல்லது கட்சியே முடிவு செய்வதா என்ற பிரச்சினையில் மீண்டும் பலத்த கோஷ்டிச் சண்டை எழுந்தது என்றும் தெரியவருகிறது.

துப்பறிவதற்கு...

துப்பறியும் வேலையில் பயிர்ச்சி அளிப்பதற்காக இந்திய சர்க்கார் ஆரம்பித்து நடத்தவிருக்கும் மத்திய பயிர்ச்சிப் பள்ளியில், மாநில போலீஸ் படைகளைச் சேர்ந்த சட்-இன்ஸ்பெக்டர்களுக்கு விஞ்ஞான முறைப்படி புலன் விசாரணைகள் நடத்துவதில் பயிர்சி அளிக்கப்படுமென்றும், இதன் மூலம், புலன் விசாரணை முறையின 'தரம்' பல அம்சங்களிலும் உயருமென்று எதிர்பார்க்கப்படுவதாயும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

கூடிப் பேசுவராம்!

புதுடில்லி, பிப். 28—

பல்வேறு பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், காரியதரிசிகளும் வரும் மார்ச் 12, 13, 14-ந் தேதிகளில் இங்கு அ. இ. கா க கட்டிடத்தில் கூடி கட்சியைப் பலப்படுத்துவது பற்றிப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர் தலைமை தாங்குவார் எனத் தெரிகிறது.

தெரிகிறதா?

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டங்களில், இனி மத்திய சர்க்கார்தான் முழு பணத்தையும் போடுமாம்! ஆனால், நிகர லாபத்தில் 4-ல் 1 பங்கு சென்னைக்குக் கிடைக்குமாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ,